செய்தி வெளியீடு எண்:302 நாள் : 24.06.2015

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் தூத்துக்குடியில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 179 கோடியே 98 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகள், கூட்டுறவு சங்கங்களின் சேமிப்பு கிடங்குகள், நவீனமயமாக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் புதிய கிளைகள், கூட்டுறவு அலுவலக வளாகம், நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு அலுவலகக் கட்டடங்களுடன் கூடிய சில்லரை விற்பனை வளாகங்கள், பதனிடும் அலகுகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் பாதுகாப்புப் பெட்டகங்கள், கணினி எடைமேடை, கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நவீனமயமாக்கப்பட்ட சுயசேவைப் பிரிவு உள்ளிட்ட கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களை சேமித்து வைத்திடும் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு புதிய கிடங்குகளை நிறுவி வருகிறது.

அந்த வகையில், தூத்துக்குடியில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், சிவகங்கை, திருவள்ளூர், திருநெல்வேலி, கடலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், வேலூர், மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, தருமபுரி, காஞ்சிபுரம், விழுப்புரம், திருப்பூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 47 கோடியே 97 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 30 கிடங்குகள்;

அறுவடைக் காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கும் வகையில், விவசாய விளைபொருட்களைச் சேமித்து அதன் மீது தானிய ஈட்டுக் கடன் பெறவும், நல்ல விலை கிடைக்கும் பொழுது விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்று அதிக லாபம் ஈட்டவும் வழிகோலும் வகையிலும் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. அந்த வகையில், தமிழ்நாட்டின் 29 மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் 113 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 884 சேமிப்பு கிடங்குகள்;

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் செயல்பட்டுவரும் நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வணிக வங்கிகளுக்கு இணையாக மேம்படுத்தப்பட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறந்த சேவையினை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வகையில் 3 கோடியே 63 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட 8 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் 36 கிளைகள்; 1 கோடியே 42 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட 12 நகரக் கூட்டுறவு வங்கிகள்; 91 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட 10 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள்; 4 கோடியே 78 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட 69 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – செவிலிமேடு, தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி ஆகிய இடங்களில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளின் 3 கிளைகளுக்கு 1 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடங்கள்;

விவசாயப் பெருமக்களின் வசிப்பிடத்திற்கு அருகிலேயே அவர்களுக்குத் தேவையான வங்கிச் சேவைகளை அளிக்கும் வகையில் கடலூர் மாவட்டம் – வேப்பூர் மற்றும் அண்ணாமலை நகர், ஈரோடு மாவட்டம் – சோலார், நீலகிரி மாவட்டம் – தேவர்சோலை, இராமநாதபுரம் மாவட்டம் – அபிராமம், விருதுநகர் மாவட்டம் – பரளச்சி மற்றும் கிருஷ்ணன்கோவில் ஆகிய இடங்களில் 39 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் 7 கிளைகள்;

விவசாயிகளுக்கு வழங்கப்படும் நகைக் கடன்களுக்காகப் பெறப்படும் நகைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டம் – பாபநாசம்,

பட்டுக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு, ஈரோடு மாவட்டம் – ஈரோடு, பெருந்துறை மற்றும் பவானி, இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி மற்றும் திருவாடனை, திருவாரூர் மாவட்டம் – திருவாரூர் ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 54 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் 20 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 60 மெட்ரிக் டன் கணினி எடை மேடை;

வேளாண் பொருள்களைப் பதப்படுத்தி மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்து கூட்டுறவு சங்கங்கள் அதிக லாபம் ஈட்டிடும் வகையில் மதுரை மாவட்டம் – பேரையூர் மற்றும் திருமங்கலம், கடலூர் மாவட்டம் – சிதம்பரம், ஈரோடு மாவட்டம் – பெருந்துறை, நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 91 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பதனிடும் அலகுகள்;

கிராமப்புற மக்களின் விலையுயர்ந்த நகைகள், வீட்டுமனை ஆவணம், நிலப் பத்திரங்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திடும் வகையில் நாமக்கல், தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 29 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 72 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் பாதுகாப்புப் பெட்டகங்கள்;

ஆரணி, பெரியகுளம், சக்கம்பட்டி, சங்கனூர், பாப்பநாயக்கன்புதூர் ஆகிய கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு 1 கோடியே 10 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்துடன் கூடிய சில்லரை விற்பனை பிரிவுகள்;

சில்லரை வணிகத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக கூட்டுறவு பண்டகசாலைகள் புதுப்பொலிவுடன் திகழ்ந்திட பொள்ளாச்சி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட சுயசேவைப் பிரிவு;

ஈரோட்டில் 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டுறவுத் துறையின் இணைப்பதிவாளர் மற்றும் துணைப்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கூட்டுறவு அலுவலக வளாகம்;

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கரூர் மாவட்டம் – சேங்கல் மற்றும் பஞ்சப்பட்டி, வேலூர் மாவட்டம் – எஸ்.மோட்டூர், திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல் ஆகிய இடங்களில் 43 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க கிடங்குகள்;

திண்டுக்கல் மாவட்டம் – இடையகோட்டை, வேலூர் மாவட்டம் – ராணிப்பேட்டை, போளிப்பாக்கம் மற்றும் குடியாத்தம், கரூர் மாவட்டம் – பாரப்பட்டி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு 56 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 182 கோடியே 38 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு இரா. காமராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு எஸ்.பி. சண்முகநாதன், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு எம். சந்திரசேகரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**

நாள் : **24.6.2015**